புதுக்கோட்டை மாநகராட்சி மாமன்றத்தின் 10.01.2025-ம் நாளிட்ட, 975-ம் எண்ணிட்ட தீர்மானத்தின் நகல்

புதுக்கோட்டை மாநகராட்சி அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் விடுபட்ட மற்றும் புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் மேற்கொள்ளும் பணியினை நிறைவேற்றிட மாநில அரசு, மத்திய அரசு மற்றும் உலக வங்கி நிதியுதவிவுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை செயல்படுத்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 29916/2024/WB, நாள்.22.11.2024-ன் வழிகாட்டுதலின்படி நகர அளவிலான செயல் திட்ட குழு (City Climate Action Plan Committee) அமைத்து நடைமுறைப்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்காணும் குழுவில் கீழ்கண்டுள்ள விவரப்படி 12 எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் கொண்ட குழுவாக அமைத்திடவும், இக்குழு நகர காலநிலை செயல் திட்ட குழுமத்தில் உள்ளடக்கவும், ஒவ்வொரு 6 மாதத்திற்கு ஒரு முறை கூடி காலநிலையை எதிர்க்கும் செயல்பாடுகளின் தேவை மற்றும் அவர்களின் நகரத்திற்கு நகர அளவிலான செயல் திட்டக் குழு (City Climate Action Plan Committee) தயாரிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குமாறு மற்றும் அதை செயல்படுத்துவது போன்றவற்றை விவாதிக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தன்னார்வ தொண்டு நிறுவனர்கள் ((NGOs)

1. PMSSS, புதுக்கோட்டை
2. நேசக்கரம் அறக்கட்டளை, புதுக்கோட்டை
3. மாவட்ட நுகர்வோர் சங்கம், புதுக்கோட்டை.

குடியிருப்பு நலச் சங்கங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு உறுப்பினர்கள் (Residential Welfare Associations Elected Body Member)

1. கே.எஸ்.எம் நகர் மக்கள் நலச் சங்கம்
   கே.எஸ்.எம் நகர்
   மாலையீடு. புதுக்கோட்டை
2. ஆனந்தா பார்க் பொதுநலச்சங்கம்
   நிஜாம் காலனி, புதுக்கோட்டை
3. கம்பன் நகர் குடியிருப்போர் நலச்சங்கம்
   கம்பன் நகர், புதுக்கோட்டை

மாமன்ற உறுப்பினர்கள் (Elected Body Members)

1. திருமதி.கார்த்திகை செல்வி, 3-வது வார்டு மாமன்ற உறுப்பினர்
2. திருமதி.ராஜேஸ்வரி, 39-வது வார்டு மாமன்ற உறுப்பினர்
3. திருமதி.மெகர்பானு, 21-வது வார்டு மாமன்ற உறுப்பினர்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அலுவலர்கள் (ULB Officials)

1. மேலாளர், புதுக்கோட்டை மாநகராட்சி
2. நகரமைப்பு அலுவலர், புதுக்கோட்டை மாநகராட்சி
3. செயற்பொறியாளர், புதுக்கோட்டை மாநகராட்சி

மேற்கண்ட 12 உறுப்பினர்களை கொண்ட நகர அளவிலான செயல் திட்டக்குழு (City Climate Action Plan Committee) அமைத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு .. மாமன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண். 2866/2022/இ2)

ஒம்/- .செ. திலகவதி
மேயர்
புதுக்கோட்டை மாநகராட்சி

தீர்மான எண். 975, நாள் : 10.01.2025
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது
// உண்மை நகல் //

ஆணையாளர்
புதுக்கோட்டை மாநகராட்சி.
3/3/2025